**கானா குடியரசின் அதிபரின் அரசு முறை இந்திய பயணம் (நவம்பர் 10-13, 2013**)

நவம்பர் 04, 2013

கானா குடியரசின் அதிபர் மேதகு ஜான் திராமனி மஹாமா, இந்திய குடியரசுத் தலைவர் விடுத்த அழைப்பினை ஏற்று அரசு முறைப்பயணமாக இந்தியாவில் 2013 நவம்பர் 10 முதல் 13ந்தேதி வரை சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார். அதிபருடன் கானா வெளியுறவுத்துறை அமைச்சர், நிதி மற்றும் பொருளாதார திட்டமிடல், வாணிபம் மற்றும் தொழிற்துறை, தகவல் மற்றும் ஊடக உறவுகள் மற்றும் கிரேட்டர் அக்ரா பிராந்தியத்திற்கான அமைச்சர்கள் மற்றும் அரசு மூத்த அதிகாரிகள் உள்ளிட்ட உயர்மட்டக்குழுவினர் வருகை புரிகின்றனர்.

கானா குடியரசின் அதிபரின் இந்த வருகையின் போது அவரை, இந்திய குடியரசுத் தலைவர் வரவேற்று அவரை கவுரவிக்கும் வகையில் விருந்து அளித்து கவுரவிக்கிறார். கானா குடியரசின் அதிபர், இந்திய பிரதமருடன் இருதரப்பு, பிராந்தியம் மற்றும் சர்வதேச விவகாரங்களில் இருநாட்டுக்கும் பரஸ்பரம் நலன் கொண்ட விவகாரங்களில் ஆலோசனை நடத்துகிறார். வெளியுறவுத்துறை அமைச்சர், வாணிபம் மற்றும் தொழிற்துறை அமைச்சர்கள் கானா குடியரசின் அதிபரை சந்திக்கின்றனர். பிக்கி, சி.ஐ.ஐ. மற்றும் அசோச்சாம் ஆகிய தொழிற்கூட்டமைப்புகள் கூட்டாக ஏற்பாடு செய்துள்ள கூட்டத்தில் அதிபர் மஹாமா உரையாற்றுகிறார்.

இந்தியாவிற்கும் கானாவிற்கும் இடையே நெருக்கமான மற்றும் நேசமான உறவுகள் நீடிக்கின்றன. இயற்கை வளங்கள் வளமாக பெற்ற கானா நாட்டுடன் பொருளாதார உறவுகள் வளர்ந்து வருகின்றன. கட்ட்டமைப்பு மேம்பாடு மற்றும் தொழிற்துறை மேம்பாட்டில் குறிப்பிடத்தக்க அளவு உறவுகள் மேம்பட வாய்ப்புகள் உள்ளன. இருநாடுகளுக்கும் இடையே இத்துறைகளில் தொழில் முதலீட்டு கூட்டாண்மையை மேம்படுத்த வாய்ப்புகள் உள்ளன.

**புது தில்லி**
**நவம்பர் 4, 2013**